முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 100/2024

அ.சா.2

2026–ம் ஆண்டு ஜுலை 21–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி –2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கீதா | தொழில் | |
| கணவர் பெயர் | ஞானசேகரன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.15 மணி,

Accused A1)Sanjay, A2)Arunkumar, A3)Mathiyalagan are present. Advocate Mrs.Arunadevi present for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் எம்.ஓலைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 27.08.2023 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் நானும், எனது கணவர் ஞானசேகரன் என்பவரும் 5 வது மைல் நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தோம். அப்போது, தொளசம்பட்டி அரசு மருத்துவமனை அருகே சென்றபோது, எதிரி சஞ்சய் அவரது நண்பர்கள் அருண்குமார் மற்றும் மதியழகன் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் எங்களுக்கு எதிர் திசையில் வந்தார்கள்.

2. எங்களை பார்த்தவுடன் அவர்கள் U turn போட்டு எங்களுக்கு பின்னால் துரத்திக் கொண்டு வந்தார்கள். 5 ஆவது மைல் செல்லும் வழியில் உள்ள ஏரி அருகே எங்கள் பின்னால் துரத்திக்கொண்டு எங்களை இடிப்பதுபோல் வந்தவர்களை நான் எதற்காக துரத்திக் கொண்டு வருகிறீர்கள் என்று எனது கணவர் கேட்டபோது, அவர்கள் வண்டியை நிறுத்திவிட்டு சஞ்சய் அவரை பார்த்து வாயமூடிவிட்டு போடா என்று சொன்னார். மேலும் என் கணவரை பார்த்து பார்த்து தேவிடியா பையா என்று திட்டினார். இதனால் நானும், எனது கணவரும் பயந்துகொண்டு திரும்ப வீட்டிற்கு வந்துவிட்டோம்.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.21 17:36:22 +0530

3. நானும் எனது கணவர், கணவரின் தம்பி நந்திவர்மன், அக்கா தேன்மொழி ஆகியேர் அன்றைய தினம் மாலை 06.30 மணியளவில் சடையன் என்பவரின் வீட்டருகே பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி சஞ்சய் என்பவர் மதுபோதையில் வந்து என் கணவரின் இடது காலின் மீது கல்லை எடுத்து அடித்தார். அருகில் இருந்த கட்டையை எடுத்து வந்து என் கணவரின் நெஞ்சின் மீது அடித்தார்.

4. அதை பார்த்த எனது கணவரின் அக்கா தேன்மொழியும், எனது கணவரின் தம்பி நந்திவர்மன், ஆகியோர் ஓடி தடுத்தபோது, சஞ்சய் நந்திவர்மனின் முதுகில் கையால் அடித்தார். பின்பு என் முடியை எதிரி சஞ்சய் பிடித்து இழுத்து, நான் அணிந்திருந்த சுடிதாரை இழுத்து கிழித்துவிட்டார். அதன்பின்பு எங்களை பார்த்து இப்போது நீங்கள் தப்பித்து விட்டீர்கள். உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று சஞ்சய் சொன்னார்.

5. அதன்பின்பு அ.சா.1–ற்கு கால்வீக்கமாகவும் மார்பில் வலியும் இருந்ததால் நந்திவர்மன் எனது கணவரை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் மனுதாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.12 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.21 17:36:25 +0530